உ

மீனாட்சிதுணை.

மதுரைமாநகரத்தில் எழுந்தருளிய

மீனாட்சியம்மன்பேரில்

# அம்பிகைமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என். சி.

1914.

மதுரை

மீனாட்சியம்மன்பேரில்

# அம்பிகைமாலை.

காப்பு-கட்டளைக்கலித்துறை.

கடக்குந்திருவிளையாட்டோடறுபத்துநாலுஞ்சொக்க
கடக்குந்தென்கூடலிலம்பிகைமாலையையாறினுக்குத்
தடக்கும்பகம்புச்சிறுகட்புகர்முகத்தாலவட்ட
முடக்குந்தடக்கையொருகோட்டுவாரணமுன்னிற்கவே

திருவேவிளைந்த செந்தேனே வடியிட்டதெள்ளமுதி, னுருவேமடப்பிள்ளை யோதிமமே பொற்றையாடகப்பூந், தருவே நின்றுமரைத்தாளே சரணஞ் சரணங்கண்டா, பருவேயணங்கரசே மதுராபுரியம்பிகையே. (க)

நாட்கொண்ட கொங்கைத் துணையும் பொன்னேயுநஞ்சிழைத்த, வாட்கொண்ட நாட்டமுந் தொண்டைச்செவவாயு மருங்குடுத்த, தோட்கொண்ட செம்பட்டு முத்தாரமுங்கொண்டுதோன்றிபென்னை, யாட்கொண்ட நாயகியே மதுராபுரியம்பிகையே (உ)

கரும்புங் கணையைந்தும் பாசாங்குசமுங் கைக்கொண்டடியேன், றிரும்புந் திசைதோறுந் தோற்றுகண்டா

யிசைதேக்குமணிச், சுரும்புண்டகாவியுஞ் சோதிநிலா வின்றுளிருஞ் சற்றே, யரும்புங் கனங்குழலாய் மதுரா புரியம்பிகையே. (ங)

வடக்குன்றமேருவு மூதண்டமட்டும் வளைந்துபுற ங், கிடக்குங்கடலும் புவனங்களேழும் கிளர்மருப்புத், தடக்குஞ்சரமெட்டு மெல்லாந்திருவுந்தி தாமரையி, லடக்கும்பராசத்தியே மதுராபுரியம்பிகையே. (ச)

நோக்குங்கருணை விழியாற் பொதுவற நோக்கியெ ன்னைக், காக்கும்படிக்குக் கருதுகண்டாயொளி சுக்குநி லா, வீக்குஞ்சடாடவி யானுண்டகாள விடத்தையமு தாக்குஞ்சிவானந்தியே மதுராபுரியம்பிகையே. (ரு)

ஒளிகொண்ட வெம்பிறைத்தோடும் பொன்மேனி மூறியதோன், றுளிகொண்ட செங்கனி வாயுமுத்தார முந்தோளுமென்றன், களிகொண்டநெஞ்சங் குடிகொ ண்டவா விசைகக்கும்வரி, யளிகொண்ட பூங்குழலாய் மதுராபுரியம்பிகையே. (சு)

பொடிபட்ட பிட்டுக்குத் தோள்கொண்ட கூடை மண்போட்டுப்பொங்கி, வெடிபட்டவையை யடைத்த வந்நாள்சொக்கர்மேனிசுற்றுங், கொடிப்பட்டபோதமு மூநீலக் கோமளமேனியினு, மடிபட்டதோ வணங்கே மதுராபுரியம்பிகையே. (எ)

விளையுங்கருங்குழிவீழாமலென்றன் வினைப்பிறவி, களையும்படிப் பதங்காட்டுவையோ கழுநீரைவென்று,

வளையுந்தரளமணிந்தோ டழுத்திய வெள்ளையைச்சென் றனையுங்கயல்விழியாய் மதுராபுரியம்பிகையே. (அ)

போக்குங்கலாமதியுங் கொன்றைமாலையும் பொன்முடிமேற், சோக்குந் தலைவன்முன் செல்லுமப்போது திரண்டழுத்தின், வார்க்குங்குமக் கொங்கையானைக்கதிர்மணிமாமுரசு, மார்க்கும்பரிபுரத்தாய் மதுராபுரியம்பிகையே. (கூ)

ஒழியாப்பனித்தடங் கண்ணீர்ததும்பவுந் துன்னடிக்கே, பொழியாப்புதுமலரிட்டுநிற்பார்க்குப் பொழிகருணை, விழியார்சுரப்பவலர்ந்தசெந்தாமரை வீடுசென்று மழியாப்பதந்தருவாய் மதுராபுரியம்பிகையே. (ய)

நாரணங்கொஞ்சம் புகழ்நான்முகற்கும் பொன்னுட்டவர்க்கும், காரணங் கொஞ்சுமுன் சிற்றடியேன்றிசைகட்டுமெட்டு, வாரணங்கொஞ்சுங் கடம்பாடவியன் மகிழ்னனுட னாரணங் கொஞ்சுமம்மே மதுராபுரியம்பிகையே. (கக)

ஊடும்பொழுதுங் கருணைவிடாமலுரைப்பவர் தோட், கூடுந்தொழிலை மறைப்பதொன்றோ நறைக்கொன்றையுந்தார், சூடுந்தலைவன்றிருமார்பில்வாரி சோரிதரளமாடுந்துணைமுலையா மதுராபுரியம்பிகையே. (கஉ)

கொடிகொண்ட சிற்றிடையார் பணிநூபுரங்கொஞ்சமடிப், பொடிகொண்ட சென்னியர்கால்வைக்குமோ

புற்றரவெடுத்து, முடிகொண்டசொக்க னழியாவிரதமு டிக்கவென்றே, யடிகொண்ட பூண்முலையாய் மதுராபுரி யம்பிகையே (கங)

பொருந்துங்கழல்விழி மாதர்களாசைப் புணரியில் யான், வருந்துந்துயரென் றெழிப்பை கொல்லோமணப் பந்தரிலே, திருந்துங்கரம்பற்றி நற்பரன்றிருமுகச்செவ் வியெல்லா, மருந்துந் துணைவிழியாய் மதுராபுரி யம்பி கையே. (கச)

பொன்னேநவமணியேயமுதே புவிபூத்தடங்கா, மி ன்னே யளிவைத்த மெய்ப்பொருளே தப்பு வேலையென் மே, லெங்நேரங்காலன் விடுத்தாலுநீ யிருகையமர்த்தி, யங்நேரம்வந்தளிப்பாய் மதுராபுரியம்பிகையே. (கரு)

நுங்கேள்வர் பாதத்து மங்காத நான்மறை நூலிட த்துங், கொங்கேய்பொருட்டுக் கமலாலயத்துங் குடிகொ ண்டமற், றெங்கேயிருக்கினு நாயடியேனுக் கிடர்வரும் போ,தங்கேவெளிப்படுவாய் மதுராபுரியம்பிகையே. ( )

இணங்கே னொருவரை நின்னிருதாளன்றி யெப் பொழுதும், வணங்கேனொருவரை வாழ்த்துகிலேனெஞ் சில் வஞ்சகர்பாற், பிணங்கேனமிர்தம் பெருகுஞ் சிறிய பிறைமுடித்த, வணங்கே சரணங்கண்டாய் மதுராபுரி யம்பிகையே. (கள)

குன்றேயெனுமுலையார் தருங்காதற் கொடுமையெ லாம், வென்றேன் வெகுளியை விட்டுவிட்டேன் விரை

த்தாமரைத்தா, ளின்றேயென் சென்னிவைத்தா யினி யான்செயு மேவலெல்லா, மன்றேயுன் னேவல்கண்டாய் மதுராபுரியம்பிகையே. (கஅ)

வடிவைத்தவேல்விழியா ரனுராகமயக்கிற்சென்று, குடிவைத்த நெஞ்சென்று மீளுங்கொலோ வன்புகொண் டதொண்டர், முடிவைத்தவாரென் முடைத்தலைமேற் றுய்யமுகத்தின் றண்டை, யடிவைத்தகோமளமேமதுரா புரியம்பிகையே. (கசு)

நெளிக்கும்புழு மொய்த்துமேயுங் குரம்பையுனின் றுமுயி, ரொளிக்கும்பொழுது வெளிப்படுவா யண்டமு ண்டவண்ண, றுளிக்குங்கருணையிற் சூல்கொண்டுலாவித் தொடர்ந்துபடர்ந், துளிக்கும்பசுங்கொண்டலே மதுரா புரியம்பிகையே. (உ0)

உலைகுதிக்குந்தழலூறியகானலை யுண்ணச்சென்று, கலைகுதிக்கும்படிபோலுழன்றேன்சுழிற் சேல்வெருண்டு வலைகுதிக்குஞ் செங்கழுநீ ருடைந்து வழிந்த செந்தே, னலைகுதிக்குந் தடஞ்சூழ் மதுராபுரியம்பிகையே (உக)

ஏலமடங்குங் குழலாற்குற் றேவலி லெய்தடியேன், காலமடங்குமுன்வந்துநிற்பாய் விண்கடந்துநின்ற, கோ லமடங்கு மறியாதபச்சைக் குழவிடைப்போ, லாலமட ங்குமம்மே மதுராபுரியம்பிகையே (உஉ)

கொஞ்சுங்கிளிமொழியார்க் கன்புபூண்டு குலையுமெ ன்ற, னெஞ்சும்பொற்பாத நினைப்பதுண்டோ வெண்க

ணிலாமதியின், பிஞ்சுங்கழைவில்லு மங்குசபாசமும் பி ச்சிமல, ரஞ்சுந்தரித்தவளே மதுராபுரியம்பிகையே. ()

செழுந்துங்கக் கொங்கையுமுத்தாரமும் பொற்சி லம்புந்திங்கட், கொழுந்துமகரக்குழையு மெல்லாம்வண் டுகோடிசுற்றி, யுழுந்தும பைசூடுந் திருமேணியுமுன் னுடலுமொன்று, யழுந்தும்பொழுதுமுண்டோ மதுரா புரியம்பிகையே. (உச)

பூண்டகைவாரிப் புதுமலர் தூவினின் பொன்னடி க்கே, கூண்டகைசென்னி குவிக்கப் பெற்றேன் பிறைக் கோடணிந்த, நீண்டகவேழப் பிட்டேறி வட்டநிலம் பி றக்கு, மாண்டகையேயண்ணகே மதுராபுரியம்பிகையே.

கணையுங்குமிழு மிணைநெடுஞ்சாபமு நுகரும்வெள் ளைத், துணையும் பவளமுஞ் செவ்விளநீருந் துவண்டபச் சைப், பணையும்பனித் தடங்காந்தளும் பாந்தளும் பத் துமொன்று யணையுந்திருவுருவே மதுராபுரியம்பிகையே.

இணைக்கும்ப மென்முலையார் யிழிவேலுக்கு மெய் யுமதன், கணைக்குந் தனியிலக்காய்விடவோ மணிக்கச்ச கலாத், துணைக்கும்ப மென்முலையார் சொக்கன்மேனிது வளக்கட்டி, யணைக்குஞ் சதானந்தியே மதுராபுரியம்பி கையே. (உஎ)

மழைக்குந்தளமடவார்தருங்காதல்வலத்தலைப்பட்,
டுழைக்குஞ் சழக்கனைக் காப்பதுண்டோவிரண்டு சன்ம
ணிக், குழைக்குங்கரந்த சுரும்பையெல்லாங் குழையூடு
நடந், தழைக்குங்கயல்விழியாய் மதுராபுரியம்பிகையே.

முலைக்கேயவசத்தொழில்விளைப்பாரின்பமோகமெ
னும், வலைக்கேயகப்பட் டருந்திவிடாமல்வலியவந்தேன்,
றலைக்கேபதம்வைத்த தண்ணளியே முத்தந்தத்துதிரை,
யலைக்கேவிழிதுயில்வாய் மதுராபுரியம்பிகையே. (உசு)

மணியுந்தவளமும் வெண்ணகையோவழிமூவர்செ
யத், துணியுந் தொழிருமுன் செய்தொழிலோ பத்தித்
துத்திமுடிப், பணியுஞ் சுருளுங் கடலேழுநின்கரப்பங்
கயத்தி, லணியுஞ்சிறுவளையோ மதுராபுரியம்பிகையே.

அம்பிகைமாலை-முற்றிற்று.

---

## சிறப்புப்பாயிரம்.

பிடித்தாரக் கட்டியணைத் தமுதூட்டியபேயினுயிர்,
குடித்தாடுமாயன் குலசேகரன்வடகுன்றைச்செண்டா
லடித்தா னியற்றிய வம்பிகைமாலையாறுகவி, படித்தார்
கள்கற்பகக்காவும் பொன்னுடும் படைப்பவரே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.